புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கலித்தொகை உணர்த்தும் திருமண சடங்குகள்

***அ. மெரில் அரசி,***
*53, சிவலிங்கநாடார் காம்பவுண்ட்,*
*மங்கம்மாள் சாலை,*
*பணகுடி – 627109,*
*திருநெல்வேலி மாவட்டம்.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். ஆண், பெண் இருவரும் திருமணத்தின் மூலம் இணைந்து வாழ்வது குடும்பம் ஆகும். பண்டைய காலத்தில் மக்கள் இல்லறத்தையே விரும்பிப் பாராட்டி வந்தனர். கணவன், மனைவி இருவரும் ஒற்றுமையுடன் இறுதி வரை அறவாழ்வு வாழ்ந்தால் வீடு வேறு தானாக வந்து சேரும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. பெற்றோர்கள் பார்த்து வைத்தும், தலைவன் தலைவி இருவரும் காதல் கொண்டு உடன்போக்கிலும் திருமணம் நடைபெறுகின்றது.*

*திருமண உறவு சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பது தமிழர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. வாழ்வில் ஒருமுறை நடைபெறும் திருமண உறவு சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக திருமணத்தின் போது பல சடங்குமுறைகளைப் பழங்காலத்திலிருந்தே கடைபிடித்து உள்ளனர். இப்போதும் இந்த சடங்குமுறைகள் ஒவ்வொருவர் மரபுக்கு ஏற்ப சிற்சில மாற்றங்களுடன் கடைபிடிக்கப்படுகிறது. இது தமிழரின் மரபு ஆகும். இந்த மரபினை அழியவிடாமல் பாதுகாக்க வேண்டியது தமிழரின் கடமை என்பதையும், அதன் முக்கியத்துவத்தையும் யாவர்க்கும்; வெளிப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

***முன்னுரை:***

*சங்கக்காலத்தில் பெண்கள் தனித்து வாழ்வதற்கு பெரிய அளவில் இடம் தரவில்லை என்றே கூறலாம். ஏனெனில் பொதுவாகப் பெண்கள் எல்லா சூழல்களிலும் ஆண்களைச்*

*சார்ந்து வாழும் நிலை இருப்பதால் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணம் என்பது பண்டையக்காலம் முதல் இன்று வரை ஆண், பெண் இருவருக்கும் நடைபெறும் ஒரு சடங்குமுறை ஆகும். திருமண வாழ்வின் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது என்பதைப் பற்றியும், கடைப்பிடிக்கப்பட்ட சடங்கு முறைகளைப் பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.*

***சடங்கு:***

*சடங்கு என்னும் சொல்லுக்கு சாஸ்திரம் விதிப்பதால் அல்லது வழக்கம் காரணமாக பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் மேற்கொள்ளும் புனிதச்செயல் என்று கிரியா தமிழ் அகராதி பொருள் தருகின்றது. வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்தி ஒரு கட்டுகோப்பில் கொண்டு வருவதற்கும், வாழ்வில் நன்மை ஏற்படுவதற்கும் சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. நாம் பின்பற்றும் ஒவ்வொரு சடங்கிற்கும் பின்னால் அறிவியல் ரீதியான காரணங்களும், மனரீதியான நம்பிக்கைகளும் உள்ளன. ஏதோ காரணத்துக்காக கடைப்பிடிக்கப்பட்ட சடங்குகள் மக்களால் வழிவழியாக காலந்தோறும் அவரவர் சமூகத்திற்கேற்ப பின்பற்றப்படுகின்றன.*

***திருமணம்:***

*தொல்காப்பியர் திருமணத்திற்கு சிறந்த இலக்கணம் வகுத்துள்ளார்.*

***‘கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்***
***கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்***
***கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே’***

***(தொல். பொருள் - 1088)***

*சங்கக்காலத்தில் திருமணம் கற்பு என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. கொடுப்பதற்குரிய உரிமையுடையவர்கள் தலைவியைக் கொடுக்க, கொள்ளுவதற்குரிய தலைவன் திருமணம் செய்வதைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். தலைவியின் சுற்றத்தார் நேரிய இறையை உடைய முன் கையைப் பிடித்துத் தர தலைவன் தலைவிக்குத் திருமணம் நடந்தது. இதனை,*

***“நேர் இறை முன்கை பற்றி, நுமர்தர***
***நாடு அறி நல்மணம் அயர்கம்” (குறிஞ்சி பா.வரி – 231,232)***

*என்னும் குறிஞ்சிப்பாட்டின் வழியறிய முடிகிறது. கொடுப்பவர்கள் கொடுக்கவும், கொடுப்பவர்கள் கொடுக்காமலும் ஆகிய இரண்டு வகையான திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணமானப் பெண்ணை ஒரு ஆண் தவறான பார்வையில் பார்ப்பதைத் தாலி, மெட்டி முதலான அடையாளம் தடுக்கும். திருமணமானவர்களைத் திருமணம் ஆகாதவர்களிடம் இருந்து வேறுபடுத்தும் அடையாளமாக இவை சமுதாயப் பெரியோர்களால் வகுக்கப்பட்டவை ஆகும்.*

***திருமணம் பேசுதல்:***

*திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். ஆதலால், திருமணம் வாழ்க்கை மூலம் இணையும் தலைவனும், தலைவியும் ஒற்றுமையாக நீண்ட காலம் வாழ*

*வேண்டுமென்பதற்காக நல்லநேரம், நல்ல இடம் பார்த்துத் திருமண தேதியை முடிவு பண்ணுவர்.*

***“மன்றல் வேங்கைக் கீழ் இருந்து***
***மணம் நயந்தனன், அம் மலைகிழவோற்கே”***

***(கலி.41 பா.வரி 43-44)***

*என்னும் பாடல் வரிகள் குறிஞ்சி நிலத்து மக்கள் வேங்கை மரத்தின்கீழ் இருந்து திருமணம் முடிவு செய்தனர் என்பதைத் தெளிவாகத் கூறுகின்றது.*

***திருமண காலம்:***

*“ஆடிப் பட்டம் தேடி விதை” என்னும் பழமொழி உழவுத்தொழில் சார்ந்தது மட்டுமின்றி பெண்களுக்குத் தக்கச் சமயத்தில் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்காகவும் ஆகும். இந்து சமயம் சார்ந்தவர்கள் ஆடி மற்றும் மார்கழி மாதங்களில் திருமணம் நடத்துவதில்லை. சங்கக்கால மக்கள் வேங்கை பூக்கும் காலத்தைத் திருமணத்திற்குரிய காலமாகக் கொண்டு இருந்தனர். இதனை,*

***“நின் உறு விழுமம் கூறக் கேட்டு***
***வருமே, தோழி! நல்மலை நாடன்***
***வேங்கை விரிவு இடம் நோக்கி,***
***வீங்கு இறைப் பணைத் தோள் வரைந்தனன் கொளற்கே” (கலி.38 பா.வரி 23-26)***

*என்ற பாடல் மூலம் தலைவன் பிரிந்து சென்றபோது தலைவி அடைந்த துன்பத்தைத் தோழி தலைவனிடம் கூறினாள். அதற்குத் தலைவன் வேங்கை பூக்கும் காலத்தில் வந்து தலைவியைத் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறினான். இதனை, தோழி தலைவியிடம் தலைவன் இல்லாதபோது நீ அடையும் துன்பத்தை உணர்ந்த தலைவன் வேங்கை மலரும் காலத்தில் பருத்த முன் கையை உடைய தோளை வரைந்து கொள்ள வருவான் என்று கூறியதை அறியலாம்.*

***பெண் கேட்டு வருதல்:***

*வாழ்வியல் நிகழ்ச்சியில் திருமணச் சடங்குகள் என்பது இரு வீட்டாரின் ஒப்புதலுடன் ஒரு நல்லநாளில் திருமணம் புரிதல் ஆகும். திருமணம் சமூகத்தில் ஒரு உயரிய இடத்தைப் பெற்றுத்தரும் அரியதொரு நிகழ்வு. திருமணத்திற்கு முன் தலைவியைப் பெண் கேட்டு செல்லும் வழக்கம் இன்றைக்கும் நடைமுறையில் உள்ளது. பெண்வீட்டார் மணமகனைக் கேட்பது மரபன்று. அவ்வாறு பெண் கேட்டுச் சொல்ல நல்லநாள் பார்க்கும் பழக்கம் அன்று முதல் இன்று வரை கடைபிடித்து வருகின்ற ஒரு மரபு ஆகும்.*

***“நெறி அறி செறிகுறி புரிதிரிபு அறியா அறிவனை முந்து றீ இ,***
***தகைமிகு தொகை வகை அறியும் சான்றவர் இனமாக” (கலி 39 பா.வரி 46-47)***

*என்ற பாடல் நூல்நெறி அறிந்தவனும், இருவரும் கூடும் முகூர்த்தநாளைக் குறிப்பதில் வல்லவனும், தான் குறிக்கும் நாள் தப்புதல் அறியாதவனும் ஆகியக் காலக்கணியனை முன்னால் கொண்டு தகை மிக்க சான்றோர் சூழ, மலைநாடன் பெண் கேட்டு வந்த செய்தி விளக்கப்பட்டுள்ளது.*

***மலர் சூடுதல்:***

*திருமணத்தின்போது கூந்தலில் பலவகையான மலர்சூட்டும் பழக்கம் இருந்துள்ளது. இந்த பழக்கம் இன்றைய காலகட்டத்திலும் இருக்கிறது.*

***"புதுவ மலர் தைஇய, எமர் என் பெயரால்***
***வதுமை அயர்வாரைக் கண்டு மதி அறியா"*** ***(கலி 114 பா.வரி 3-4)***

*என்ற பாடலில் புதிய மலர்களைச் சூட்டி எம் சுற்றத்தார் என் பெயரைச் சொல்லி, எனக்கு திருமணம் முடிக்க முயல்கின்றனர் என தலைவி, தோழி மூலம் தலைவனிடம் கூறித் தன்னை மணமுடிக்குமாறு வலியுறுத்துகிறாள். இதன் மூலம் திருமணத்தில் மலர்சூட்டும் பழக்கம் இருந்ததை அறியலாம்.*

***சிலம்பு கழித்தல்:***

*மகளிர் காலில் அணியும் அணியுள் சிலம்பும் ஒன்று. இவ்வணி, திருமணத்திற்கு முன்பாகக் கழற்றப் பெற்றது. இந்நிகழ்ச்சியைச் 'சிலம்புகழி நோன்பு' எனக் குறித்தனர். சங்க கால மக்கள் தம் வாழ்நாளின் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒருசில அணிகளுக்கு முதன்மை தந்தனர். அணிந்து மகிழ்ந்தனர். சான்றாக, ஆண் மக்களுக்குச் சிறுவயதில் அணியப்பெறும் அணியாகக் கிண்கிணி கருதப்பெற்றது. பருவம் அடைந்ததும் கிண்கிணி களையப்பெற்றுக் கழல் அணிவிக்கப்பெற்றது. இதுபோன்றே பெண்களுக்கு இளம்வயதில் அணியப்பெறும் அணியாகச் சிலம்பு இருந்து இருக்கவேண்டும். அவள் மணப்பருவம் அடைந்து மணம்புரியுமுன் ஆடவர்க்கும் கிண்கிணி களைந்ததுபோல் பெண்களுக்கு சிலம்பு களையப் பெற்றிருக்க வேண்டும்.*

***திருமண வீட்டின் அலங்காரம்:***

*திருமணத்தில் அலங்காரம் என்பது ஒரு இன்றியமையாத கூறாக உள்ளது. மனித வாழ்க்கையில் திருமணம் ஒருமுறைதான் நிகழும். ஆதலால், இந்நிகழ்ச்சிக்குப் பல்வேறுவிதமான அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. இன்றைய சூழலில் அலங்காரம் கண்கவரும் விதமாகவும் அமைகின்றது. சங்க காலத்தில் திருமண வீடுகளில் புதுமணல் பரப்பி அலங்கரித்து உள்ளனர்.*

***"தருமணல் தாழப் பெய்து, இல் பூவல் ஊட்டி"*** ***(கலி 114 பா.வரி11)***

*என்ற கலித்தொகை பாடலில் திருமணத்தின் போது புதுமணல் பரப்பி, செம்மண் பூசி வீட்டை அழகுபடுத்திய செய்தி இடம் பெற்றுள்ளது.*

*இதேபோல்,*

***"தண் பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி,***
***மனை விளக்குறுத்து மாலை தொடரி"*** ***(அகநானூறு 86 பா.வரி 3-4)***

*என்னும் அகநானூற்றுப் பாடலில் குளிர்ச்சியான பந்தலை அமைத்து மணலைப் பரப்பி, மணி விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்க விட்டு வீட்டை அழகுபடுத்தியது கூறப்பட்டுள்ளது.*

***கடவுள் வழிபாடு:***

*எந்த ஒரு நல்ல காரியத்தைத் தொடங்கும்போது இறைவனை வழிபடுவது தமிழர் மரபு. திருமணத்தின் போதும் கடவுளை வழிபடும் பழக்கம் இருந்தது. இந்து சமயத்தில் திருமணத்திற்கு முன்பு கடவுளுக்கு பொங்கல் வைத்து வழிபடும் பழக்கம் இருந்தது. இன்றைய காலகட்டத்திலும் பொங்கல் வைத்து கடவுளை வழிபடும் பழக்கம் இருக்கிறது. ஆயர்குலத்தினர் கடவுளை வழிபட்ட நிகழ்வை கலித்தொகையில்,*

***"எருமைப் பெடையோடு, எமர் ஈங்கு அயரும்"*** ***(கலி 114 பா.வரி 12)***

*என்ற பாடல், எருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு வைத்து அதனைத் தெய்வமாகப் பாவித்து வழிபட்டதை தெளிவாகக் கூறுகின்றது.*

*இதுபோல,*

***"கடிநகர் புனைந்து கடவுட் பேணி"*** ***(அகநானூறு 136 பா.வரி -6)***

*என்னும் அகநானூறு பாடல் திருமணத்தின்போது வீட்டை அலங்காரம் செய்து கடவுளை வழிபட்டனர் என்ற செய்தியை அழகாக கூறுகின்றது.*

***கல்யாண ஒப்பனை:***

*பண்டையகாலம் முதல் இன்று வரை திருமணத்திற்கான அலங்காரம் மிச்க சிறப்பாக அமைந்து இருக்கும். திருமண வீட்டாரின் வசதிக்கு ஏற்ப கல்யாண ஒப்பனை சிறப்பாக இருக்கும். கல்யாண ஒப்பனை பற்றி செய்திகள் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது. இதனை,*

***"வதுவை விழவு அணி வைகலும் காட்டினையாய்"*** ***(கலி 98 பா.வரி – 3)***

*என்ற பாடல் மூலம் அறியலாம். தமிழர்களின் பாரம்பரிய உடை வேட்டி, சோலை ஆகும். மணமகன் பட்டு வேட்டியும், மணமகள் பட்டுச் சேலையும் அணிவது பண்டைய தமிழ் மக்களின் நாகரிக உடை ஆகும். பெரும்பாலும் திருமணத்தின் போது இத்தகைய ஆடைத்தான் அணிகிறார்கள். இன்று நாகரீக வளர்ச்சியினால் பாரம்பரிய உடை மறைத்து வருகின்றன.*

***காப்பு அணிதல்:***

*வாழ்வில் ஏற்படும் தீமையில் இருந்து விடுபட்டு நன்மை பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகக் காப்பு கட்டப்படுகிறது. திருமணத்தின்போது மணமகன், மணமகள் இருவருக்கும் காப்பு அணியப்படுகிறது. இந்த சடங்குமுறை இப்போதும் பின்பற்றப்படுகிறது.*

***"மென்பூ வாகைப் பயம்பமல் அறுகைத்***
***பழங்கன்று கறித்த பயம்பு அமல் அறுகைத்***
***தழங்கு குரல் வானின் தலைப் பெயற்கு ஈன்ற***
***மண்ணு மணி அன்ன மாஇதழ்ப் பாவைத்***
***தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டி"***

***(அகநானூறு 136 பா.வரி 10-14)***

*என்னும் அகநானூறு பாடல் வரிகள் திருமணத்தின்போது மணமக்களின் கையில் வெண்மையான நூலில் வாகை இலையையும், அறுகம்புல்லையும் சேர்த்துக் காப்பாகக்*

*கட்டினர் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. தற்காலத்தில் மணமக்கள் மணவறையில் இருக்கும் பொழுது மஞ்சள் துண்டு இணைக்கப்பட்டக் கயிற்றினை அந்தனர் ஒருவர் மணமகனின் வலது கையிலும், மணமகளின் இடது கையிலும் கட்டிவிடும் வழக்கம் புரோகிதர் முன்னிலையில் நடைபெறும்.*

***மணமுழவு இசைத்தல்:***

*சங்க காலத்தில் திருமணத்தின்போது மணமுழவு என்னும் இசைக்கருவி இசைக்கப்பட்டுள்ளது. திருமணத்தின்போது மங்கலம் இல்லாச் சொற்கள் மணமக்கள் காதில் விழக்கூடாது என்பதற்காக மத்தளம், நாதஸ்வரம் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. சங்கக்காலத்தில் மணமுழவு என்னும் இசைக்கருவி இசைக்கப்படுவது மருதக்கலியில் இடம்பெற்றுள்ளது. இதனை,*

***"துணை மலர்க் கோதையார் வைகலும் பாராட்ட***
***மண மனைத் ததும்பும் நின் மண முழவந்து எடுப்புமே"***
***(கலி 70 பா.வரி 9-10)***

*என்ற பாடல் மூலம் அறியலாம்.*

***வேள்வியைச் சுற்றி வலம் வருதல்:***

*திருமணத்தின்போது மணமக்கள் வேள்வியை சுற்றி வரும் வழக்கம் அன்று முதல் இன்று வரை காணப்படுகின்றது. திருமணத்தின் மூலம் ஏற்படும் பந்தம் நீண்ட நாள் நிலைக்கவேண்டும் என்பதற்காக ஐம்பூதங்களையும் சாட்சியாக வைத்து திருமணம் செய்வதால், வேள்வி வளர்த்து அதனை சுற்றி மணமக்கள் வலம் வருகின்றனர். இந்து சமயத்தினர் வேள்வியைச் சுற்றி வரும் சடங்கு முறையைக் கடைபிடித்து வருகின்றனர். சங்க இலக்கியத்தில் வேள்வியைச் சுற்றி வலம் வருதல் பற்றிய செய்திகள் அதிகமாக இடம் பெறவில்லை. மணமக்கள் தீயினை வலம் வரும் செய்தி கலித்தொகையில் ஒரு பாடலில் மட்டுமே காணப்படுகின்றன. இதனை,*

***"காதல் கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய***
***மாதர் கொள் மான்நோக்கின் மடந்தை தன் துணையாக***
***ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்,***
***ஆய்தூவி அன்னம் தன் அணி நடைப் பெடையயொடு***
***மேதகத் திரிதரூஉம் மிகுபுனல் நல் ஊர"!***
***(கலி 69 பா.வரி 3-7)***

*என்ற பாடலில், காதலித்து திருமணம் செய்து கொள்கின்ற திருமண நாளில் புத்தாடை அணிந்த தலைவி தலைவனை மருண்ட மான் போன்ற கண்களால் நோக்கி இப்பிறவியிலும், மறுபிறவியிலும் நீ எனக்கு கணவனாக வர வேண்டும் என்று வணங்கி அந்தணர்கள் வளர்த்த யாகத்தைச் சுற்றி வலம் வந்தது போல, குளத்தில் பூத்திருக்கும் தாமரை மலர்களில் தனித்திருந்த ஒரு மலரை மெல்லிய மயிரினை உடைய ஆண் அன்னம் அழகிய நடையினை உடைய பெண் அன்னத்தோடு சேர்ந்து வலம் வரும் பெரிய பொய்கை உடைய மருத நாட்டுத் தலைவனே என்று காமகிழத்தி கூறுகின்றாள். மருத நாட்டு பொய்கையைச் சிறப்பித்துக்*

கூறும் இவ்வுவமை மூலம் சங்க காலத்தில் திருமணத்தின் போது அந்தணர் வளர்த்த வேள்வித் தீயைச் சுற்றி மணமக்கள் வலம் வந்ததை அறிய முடிகின்றது.

**திருமண உணவு:**

திருமணத்தின்போது சுவையுள்ள உணவுகள் வழங்கப்படுவது இன்றியமையாத நிகழ்வாகும். காரணம் திருமணத்திற்கு வருபவர்கள் வயிறார உண்டு மனதார மணமக்களை வாழ்த்த வேண்டும் என்பதற்காகத் தான் சுவையுள்ள உணவினை வழங்குகின்றனர். திருமணத்தில் சைவ உணவு கொடுக்கும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்தது. ஆனால், தற்காலத்தில் நாகரிக வளர்ச்சியினால் அசைவ உணவு மற்றும் பன்னாட்டு உணவுகளும் வழங்கப்படுகின்றன. திருமணத்தின் போது உணவு வழங்கும் செய்தி கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது. இதனை,

**"நோய் இலை இவட்கு என நொதுமலர் பழிக்குங்கால்,**
**சிறு முத்தனைப் பேணி, சிறுசோறு மடுத்து, நீ "**

***(கலி 59 பா.வரி 19-20)***

என்ற பாடல் மூலம் அறியலாம் மேலும்,

**"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை**
**பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்"**

***(அகநானூறு 86 பா.வரி 1-2)***

என்னும் அகநானூற்றுப் பாடலில், திருமணத்தின் போது உழுத்தம் பருப்போடு கலந்து சமைத்துக் குழைந்த பொங்கலோடு சேர்த்து சோற்றுருண்டையை உணவாக வழங்குவதை அறிய முடிகிறது.

**முதலிரவு:**

திருமணம் முடிந்த பிறகு அன்று இரவே மணமகன், மணமகள் இருவருக்கும் நடத்தப்படும் ஒரு சடங்காக முதலிரவு அமைகிறது. திருமணத்தின் போது பல்வேறு விதமான சடங்கு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அதுபோல, திருமணம் முடிந்த பிறகு முதலிரவு என்னும் சடங்கு பின்பற்றப்படுகின்றன. வயது முதிர்ந்த பெரியவர்கள் திருமணத்தின் போது மணமக்களை "பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க" என்று மனதார வாழ்த்துகின்றனர். முதலிரவு சடங்கிற்கும் நல்ல நேரம் பார்க்கும் பழக்கம் இன்றும் காணப்படுகிறது. நல்ல நேரத்தில் இருவரும் இணைந்து வாழ்க்கையைத் தொடங்கினால் தான் குழந்தைப் பேறு கிடைக்கும் என்பது பண்டையத் தமிழ் மக்களின் நம்பிக்கை ஆகும்.

முதலிரவு குறித்த செய்தி அகநானூற்றுப் பாடலில் காணப்படுகின்றது. இதனை,

**"கல்லென் சும்மையர், ஞெரேரெனப் புகுதந்து**
**பேர் இற்கிழத்தி ஆக எனத் தமர் தர,**
**ஓர் இற் கூடிய உடன் புணர் கங்குல்,**
**கொடும் புறம் வளைஇ, கோடிக் கலிங்கத்து**
**ஒடுங்கினள் கிடந்த ஓர் புறம் தழீஇ,**
**…………………**

…………………

*(அகநானூறு 86 பா.வரி 18-31)*

*திருமணம் முடிந்த பிறகு ஆர்வத்துடனும், ஆரவாரத்துடனும் சூழ்ந்த உறவினர் "இன்று முதல் நீயும் பெரிய மனைக்கிழத்தி ஆகிவிட்டாய்" என்று கேலி பேசி மணமகளுக்கு கோடியுடுத்தி மெல்லிய அலங்காரங்களைச் செய்து வனப்புடன் கூடிய முதலிரவு அறைக்குள் உடன் கூடிய புணர்ச்சிக்குரிய அன்றிரவே அவளை அனுப்பி வைத்தனர். அவ்வறைக்குள் நுழையும் மணமகள் உடுத்திய புதிய புடவைக்குள் தன்னை ஒடக்கிக் கொண்டு தன் இனிய கணவன் இருக்கும் இடம் நோக்கிச் செல்கின்றாள். அப்போது அவள் புத்தாடையில் ஒடுங்கி முகம் புதைத்துக் கிடந்தாள். அவளைத் தழுவும் விருப்பத்தோடு முகத்தை மூடிய துணியைச் சற்றே விலக்க அவள் அதற்கு அஞ்சி பெருமூச்சு விட்டாள். நடுங்கி ஒடுங்கினாள். "ஏன் பயந்தனை, உன் மனதில் உள்ளதை உள்ளவாறு என்னிடம் கூறு" என கூறினான்.*

*அப்போது மானைப்போல் மடமை கொண்டவளும், செருக்கினையுடைய நோக்கினையுடையவளும், மாநிறத்தினை உடையவளுமாகிய மணமகள் அகம் மலர்ந்த மகிழ்ச்சியளாய் முகம் தாழ்த்தி என் காதலி மெலிந்த மடல் கொண்ட காதில் அணிந்து இருந்த சிவந்த மணிகள் பதித்த அழகிய குழைகள் அசைய விரைந்து வந்து தனக்குரியவனை வணங்கினாள். ஆதலால் அவள் எக்காலத்தும் என்பால் அன்புடையவள். அதனை நீ அறியாய் என்று தோழியிடம் கூறினான். புலவர் நல்லாவூர் கிழார் காதலால் பிணைக்கப்பட்ட தலைவன் தலைவியது முதல் இரவை மிக நாகரிகமாக, மிக நளினமாக தலைவன் கூற்றாகச் எடுத்துச் சொல்கிறார் என்பதும் எண்ணி மகிழத்தக்கது.*

***முடிவுரை:***

*தமிழ்மொழி பிறமொழிகளிலும் நாகரிங்களிலும் சிறந்த மொழி என்பது மொழி ஆராய்ச்சியாலும், அகழ்வாராய்ச்சியாலும் நிறுவப்பட்ட உண்மை. தமிழினத்தைப் பொறுத்தளவில் சங்க காலமே தமிழரசு பொற்காலமாகும். நாகரிக வளர்ச்சியினால் இடைக்காலத்தில் தமிழ் மரபுக்கு மாறான வாழ்க்கை முறை தமிழரிடம் வந்து விட்டது. தமிழரின் பழக்க வழக்கங்கள் மாறின. திருமண முறைகளும் மாறின. இன்றைய தமிழரின் மணமுறை பண்டைத் தமிழர் மரபுக்கு முற்றும் மாறாகதாக இருக்கிறது.*

*காப்பிய காலத்தில் மங்கல நாண் அணிந்த குறிப்பு உள்ளது. (சிலம்பு) ஆனால் இன்று அனைத்துத் தமிழ்ச் சமுதாயத்திலுமு; தாலி அணிவிக்கின்ற பழக்கம் உள்ளது. புரோகிதர் வைத்துத் தான் திருமண நிகழ்வினையே நடத்துகின்றனர். புரோகிதர் வைத்து செய்யும் திருமணம் ஆரியப்பண்பாட்டு கலப்பினால் வந்தது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

***மேற்கோள்கள்:***


*1) அகப்பொருள் விளக்கம் - முனைவர் ச.திருஞானசம்பந்தம்*
*2014, கதிர்பதிப்பகம்,*
*தெற்குவீதி, திருவையாறு - 613 204.*

*2) தொல்காப்பியம் பொருளதிகாரம் - தமிழண்ணல்*
*2014, செல்லப்பா பதிப்பகம்,*
*மயூரா வளாகம், 48,*

| | | | |
|---|---|---|---|
| | | | *தானப்ப முதலி தெரு, மதுரை - 625001.* |
| *3)* | அகநானூறு | - | முனைவர் இரா.செயபால்<br>*2004, பாவை பிரிண்டர்ஸ் (பி)லிட்,*<br>*ஜானிஜான் கான்சாலை,*<br>*இராயப்பேட்டை,*<br>*சென்னை - 14.* |
| *4)* | க்ரியா தற்காலத் தமிழ் அகராதி | - | ஈஸ்ட் வெஸ்ட் புக்ஸ்<br>*மெட்ராஸ் (பி)லிட்,*<br>*62-A, ஆர்ம்ஸ் ரோடு,*<br>*கீழ்பாக்கம் - 600 010.* |